ஹோமியோபதி வைத்தியம்

மலச்சிக்கல்

வியாதி விவரமும், சிகிச்சையும்

ஆசிரியர்
டாக்டர் வி. எஸ். சுப்ரமண்யம்

முக்கிய விஷயம்.

ஜர்மனி தேசத்தில்வாழ்ந்த டாக்டர் சாமுவேல் ஹானிமன் என்பவரால் 150 ஆண்டுகளுக்கு முன் ஹோமியோபதி வைத்தியமுறை கண்டு பிடிக்கப்பட்டது. இன்று உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் பரவி இருக்கிறது.

தத்துவம்

விஷம் விஷத்தை நீக்கும் என்னும் நமது நாட்டில் வழங்கிவரும் தத்துவத்தையே ஹோமியோபதி வைத்திய முறை அஸ்திவாரமாகக்கொண்டுள்ளது. அதாவது வியாதியில்லாத உடம்பில் அதிக அளவிலே உட்கொள்ளப்பட்டால் ஒருவகை வியாதிக் குறிகளை ஏற்படுத்தும் ஒரு ஔஷதம் அவ்விதமான குறிகளுடன் காணப்படும் வியாதியுள்ள போது குறைந்த அளவிலே உட்கொள்ளப்பட்டால் வியாதியைக் குணம் செய்யும் என்பதே. உதாரணமாக அபினியை அதிக அளவில் உட்கொண்டால் மயக்கம் ஏற்பட்டு நினைவு தப்பி விடுகிறது. சுரம் முதலிய பல வியாதிகளில் நினைவு தப்பிவிடும்போது அபினியைக் குறைந்த அளவில் கொடுத்தால் வியாதி நீங்குகிறது.

ஹோமியோபதி வைத்திய முறையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஔஷதங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் மேலே எழுதியபடி முதலில் ஆரோக்கியமானவர்களுக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்யப்பட்டு என்னென்ன வியாதிகளுக்கு உபயோகமாகுமென்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே மற்ற வைத்திய முறையில் முக்கியமாக இங்கிலீஷ் வைத்திய முறையிலுள்ளது போல் புதிய புதிய மருந்துகளைத் தேடவேண்டியதில்லை.

ஔஷதம் தேர்ந்தெடுத்தல்

இப் புத்தகத்தில் உள்ள வியாதிக்குப் பல ஔஷதங்கள் உபயோகமாகின்றன வென்பதைக் காண்பீர்கள். பழக்கம் இல்லாதவர்களுக்கு ஒரு வியாதிக்கு இவ்வளவு ஔஷதங்கள் தேவையா என்று மலைப்புத் தட்டுவது இயல்பு. ஆனால் வியாதியின் பெயர் ஒன்றாய் இருந்தாலும் நபருக்கு நபர் அதன் குறிகள் வித்தியாசப்படுவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இப்புத்தகத்தில் உள்ள வியாதிக்குப் பல ஔஷதங்கள் உபயோகமாகின்றன வென்பதைக் காண்பீர்கள். பழக்கம் இல்லாதவர்களுக்கு ஒரு வியாதிக்கு இவ்வளவு ஔஷதங்கள் தேவையா என்று மலைப்புத்தட்டுவது இயல்பு. ஆனால் வியாதியின் பெயர் ஒன்றாய் இருந்தாலும் நபருக்கு நபர் அதன் குறிகள் வித்தியாசப்படுவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். உதாரணமாக குளிருடன் முறை வைத்து வரும் சுரத்துக்கு மலேரியா சுரம் என்று பெயர் இடப்படுகிறது. இது எல்லோருக்கும் ஒன்று போல் வருகிறதா! இல்லை. ஆகவே மலேரியா என்ற பெயருள்ள எல்லாச் சுரங்களுக்கும் ஓரே ஔஷதம் கொடுத்தால் நல்ல பலன் ஏற்படுவதில்லை. ஆகவே வியாதியின் பெயர் எதுவாக இருந்தாலும் அவ்வியாதியால் ஏற்படும் குறிகளை அனுசரித்தே நாம் ஔஷதம் கொடுக்கவேண்டும். பழகப்பழக இதன் உண்மையும் சௌகரியமும் தெரியும்.

வீரியம்

ஹோமியோபதி வைத்திய முறையில் வியாதிகளுக்கு ஔஷதம் குறைந்த அளவில் கொடுக்கப்படவேண்டும் என்பதை எழுதியுள்ளோம். நாம் கஷாயம் என்று தமிழில் சொல்கிறோமே அதுதான் ஆங்கிலத்தில் மதர் டிஞ்சர் (Mother Tincture) என்று சொல்லப்படும். தாய்த்திரவம் என்றும் சொல்லலாம். சில ஹோமியோபதி ஔஷதங்கள் மட்டும் கஷாயமாகவே உபயோகமாகும்; மற்ற ஔஷதங்களை எல்லாம் ஹோமி

யோபதி வைத்திய முறையில் சொல்லி யுள்ளபடி தண்ணீர் அல்லது அல்கஹாலைக் குறிப்பிட்ட அளவு கலந்து கஷாயத்தில் அடர்த்தியைக் குறைத்து உபயோகப் படுத்துகிறார்கள். இவ்வாறு ஔஷதத்தின் அடர்த்தியைக் குறைப்பதை "வீரியப்படுத்துதல்" என்று சொல்லப்படுகிறது. 3 தரம் வீரியப் படுத்தப் பட்ட ஒரு ஔஷதத்தில் கஷாயத்தின் அளவு பத்து இலட்சத்தில் ஒரு பங்குதான். எத்தனை தடவை வீரியப் படுத்தப் பட்டிருக்கிறது என்பதை ஔஷதத்தின் பெய ருக்குப் பிறகு குறிப்பிடுவது வழக்கம். உதாரணம் அகோனைட் 3. தாய்த்திரவம் Q என்று அடையாளம் இடப்படும். உதாரணம் அகோனைட் Q.

உட்கொள்ளும் அளவும் காலமும்

கஷாய உருவத்தில் உபயோகப்படும் ஔஷதங் களைத் தவிர மற்றவைகளை 3, 6, 12, 30 முதலிய பல வீரியங்களில் உபயோகிக்கலாம். நல்ல அனுபவம் உள்ள வர்கள், 200, 1000 வீரியங்களிலும் உபயோகிப்பார்கள். எல்லா ஔஷதங்களும் திரவமாகவும் மாத்திரையாகவும் கிடைக்கும். மாத்திரையானால் 3-4-ம் திரவமானால் 2, 3, சொட்டும், கஷாயமானால் 5 முதல் 10 சொட்டு களும் ஒரு வேளை ஔஷதம். சாதாரண வியாதிகளில் தினம் 3 வேளைகள் போதும். சுரம், வயிற்றுப்போக்கு முதலியவைகளில் 3 மணிக்கு ஒரு தடவை கொடுக்க லாம். காலரா, வலி, வலிப்புகள் போன்ற அவசர வியாதிகளில் 15 நிமிஷங்களுக் கொரு தடவை உபத்தி ரவம் குறையும்வரை கொடுக்கலாம்.

பத்தியம்

காப்பி, டீ, பீடி, புகையிலை, கசப்புக் காய்கறிகள், வியாதியை அதிகமாக்கும் பொருள்கள் விலக்கப்பட வேண்டும்.

குறிப்பு :—இப்புத்தகம் கையில் இருந்தால் வைத்தியரின் துணைதேவை இல்லையென்று நினைப்பது தவறு. வைத்தியர் உதவி கிடைக்காத இடங்களிலும் சமயங்களிலும் உபயோகமாவதற்கு என்றே எழுதப்பட்டுள்ளது. ஆகவே அனுபவமுள்ள வைத்தியர்கள் இருந்தால் அவர்களுடைய ஆலோசனைப்படியும் நடந்துகொள்வதே நலமாகும்.

வியாதிக்கு ஏற்ற ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பது மட்டும் போதாது. உபயோகிக்கும் ஔஷதம் நம்பிக்கையானதாகவும் இருப்பது அவசியம். நம்பிக்கையுள்ள இடங்களிலிருந்தே தருவித்துக் கொள்ளவேண்டும். எல்லா ஹோமியோபதி ஔஷதங்களையும் எந்த உருவத்திலும் வீரியத்திலும் கீழ்க்கண்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவைகளின் தரத்துக்கு உத்தரவாதம்.

எல்லா முக்கியமான வியாதிகளுக்கும் இதைப் போன்ற சிறு பிரசுரங்கள் வெளியிடப் பட்டுள்ளன. முழு விவரங்களுக்கு எங்களுக்கு எழுதுங்கள்.

சிக்கலான வியாதிகளுக்கு நமது பிரதான டாக்டரிடம் தபால் மூலமோ நேரிலோ ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம். தபால் மூலம் ஆலோசனைக்கு ரூ 2-ம் நேரில் வந்தால் ரூ 5-ம் பீஸ் செலுத்தவேண்டும்.

★

தி ஹோமியோபதி ஹௌஸ்

மயிலாப்பூர் :: மதரூஸ்-4.

மலச்சிக்கல்

(Constipation)

வியாதி விவரம்

குடல்கள் ஒழுங்காக வேலை செய்யாவிட்டால் மலச் சிக்கல் ஏற்படுகிறது. அவை ஒழுங்காக வேலை செய்யத் தேவைப்படும் விஷயங்கள் மூன்று. முதலாவது உட் கொள்ளப்படும் ஆகாரத்தில் கழிக்கப்படும் பகுதியே மலமாக மாறுவதால் போதிய அளவு ஆகாரம் உட் கொள்ளப்படவேண்டும். இரண்டாவது குடல்களி னுள்ளே இயற்கையாகச் சுரக்கும் ஒரு வகை நீர். மூன்றாவது குடல்களிலுள்ள தசைகள் பலம் பொருந்திய தாக இருந்து மலத்தை அந்தந்த இடத்திற்குத் தள்ளும் சக்தியுடன் இருப்பது. தசைகளின் மலம் தள்ளும் சக்தி ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக மாறுபட்டிருக்க லாம். இம்மாறு பாட்டை வியாதி என்று கருத முடி யாது. பலர் தினமொருமுறையும் சிலர் தினம் இரு வேளைகளும் மற்றும் சிலர் இரண்டு நாட்களுக்கொரு முறையுமாக மலம் கழிப்பது இயற்கை. ஆகவே மலம் வெளிப்பட வழக்கத்தைவிட அதிகமான நேரம் பிடிக்கு மானால் அதை மலச்சிக்கல் என்று சொல்லலாம்.

ஏற்படும் காரணங்கள்

குடல்களின் வழியாக மலம் தள்ளப்படுவது இயற் கையில் நடைபெறுகிறது. ஏற்கனவே சொல்லியுள்ள படி இக்காரியம் குடல் தசைகளின் பலத்தையும் உட் கொள்ளப்படும் உணவின் அளவையும் பொறுத்தது.

சில குடும்பங்களில் எல்லோருக்கும் குடல்தசைக ளின் பலம் குறைவாய் இருக்கக்கூடும். அல்லது வய தான காரணத்தினாலும் பலம் குறையலாம். சுரம், திடீரென்று தோன்றும் கடுமையான வியாதிகள். இரத்தசோகை, சூதகபாண்டு, ரிக்கெட்ஸ் (Rickets) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் குழந்தைகளின் எலும்பு சம்பந்தமான வியாதி, நரம்புச்சோர்வு, மனச் சோர்வு முதலிய பல காரணங்களால் சிறிது காலத்திற்கு குடல் தசைகள் பலம் குறைந்துபோகலாம். வயிற்றில் அதிக வாயு உற்பத்தியாகும் போதும் இந்நிலைமை ஏற் படக்கூடும்.

உண்ணும் உணவிலிருந்தே குடலுக்குப் பெரும் பாலும் ஊக்கம் தோன்றுகிறது. உணவு அளவில் குறைந்தால், அல்லது உணவில் இருக்கவேண்டிய தண்ணீரின் அளவு குறைந்தால் அல்லது போதிய சத்துள்ளதாய் இல்லாவிட்டால் மலச்சிக்கல் உண்டாக இடமுண்டு. சிலருக்கு சீரண சக்தியும் குடல்களின் உணவையுறிஞ்சும் சக்தியும் அபரிமிதமாய் இருக்க லாம். அவர்களுக்கு மலத்தின் அளவு குறைவாகவே இருக்கும். சீரணக் கோளாறுள்ளவர்களுக்கு அடிக்கடி உணவு வாயாலெடுக்கப்பட்டால் மலச்சிக்கல் உண் டாகும்.

ஒழுங்கான வேளைகளில் மலம் கழிக்கப் பழக்க மேற்படுத்திக் கொண்டவர்களுக்கு ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மலப்பையிலிருந்து ஒரு தூண்டுதல் கிளம்பி பெருங்குடலை இயக்குகிறது. அப் பொழுது மலம் கழிக்கவேண்டும் என்ற உணர்ச்சி ஏற் பட்டு முயற்சித்தால் மலம் வெளியாகிறது. இந்த

உணர்ச்சியை மதிக்காவிட்டால் மலம் உள்ள முக்கப் படுவதுடன் மலப்பையின் தூண்டும் சக்தி படிப் படியாகக் குறைந்துபோய் அடியோடு மறைந்தும் போக லாம். நீடித்த மலச்சிக்கல் உள்ளவர்களில் பலருக்கு இதுவே காரணமாய் இருக்கும்.

மலம் கழிக்க முயற்சி செய்யாமலே இருந்தால் குடல்கள் இரண்டு, மூன்று அல்லது 4 நாட்களுக்கொரு முறையே மலத்தை வெளிப்படுத்தும். இதனால் மலம் மலப்பையில் அடைந்து இறுகி கடினமான உருண்டைக ளாக மாறும். இச்சமயத்தில் எவ்வளவு முயற்சி செய் தாலும் முதலில் மலம் வெளியாகாது. கடைசியில் இரண்டு மூன்று உருண்டைகள் வெளியாகலாம். பிறகு முன்போல் பல நாட்களுக்கு மலச்சிக்கல் நீடிக்கும். இத னால் வியாதியஸ்தருக்குப் பலவித கோளாறுகள் உண் டாகும். ஆசனவாய்ப்பக்கத்தில் கனம், அல்லது கடுமை யான அரிப்பு, இரத்தக் குழாய்கள் புடைத்தல், மூல மும் ஏற்படலாம். சில சமயங்களில் தொடைகளில் வலி, அடிவயிற்றில் உப்பிசம், ஏப்பம், நாக்கில் அழுக்குப் படிதல், வாய் நாற்றம் முதலியவைகளும் காணப்படுவது சகஜம். சிலருக்கு தலைவலியும் உடல் சோர்வும் உள்ளச் சோர்வும் கூட ஏற்படலாம்.

ஔஷத சிகிச்சை;

அலூமினு (6) ஏராளமான மலம் குடலினுள் இருந்தாலும் மலம் கழிக்கத் தூண்டுதலோ சக்தியோ இருப்பதில்லை. இளகிய மலத்தை வெளியேற்றவும் பல மாக முக்கவேண்டி வருதல். கிழவர்களுக்கும் குழந்தை களுக்கும் ஏற்படும் மலச்சிக்கலுக்குச் சிறந்தது.

ஆலோ ஸகோட்ரினு (30) அடிக்கடி தூண்டுதல், சிறிதளவே வெளியாகும் அல்லது ஒன்றுமே வெளியாகாது. கெட்டியான மலமாய் இருந்தாலும் முயற்சியில்லாமலே வெளிப்படும்.

ஓபியம் (200) குடல்களின் சக்தி முற்றிலும் அழிந்தது போல் இருக்கும். மலம் கடினமான, கறுப்பு உருண்டைகளாக இருக்கும். மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்பட்டாலும் ஆசனவாய் அடைத்திருப்பதுபோல் தோன்றுவதால் மலம் வெளியாகாது. அடிவயிறு கனமாய்த் தோன்றுவதும் துடிப்பும் உண்டாகலாம். வாய் காய்ந்து அதிக தாகம் ஏற்படும், ஆனால் பசி குறைந்துவிடும்.

காலின்ஸோனியா (6) நாட்பட்ட மலச் சிக்கலால் ஆசனவாய் அருகே உள்ள இரத்தக் குழாய்கள் தடித்து புடைத்து வெடித்து இரத்தம் வெளியாகும்போது அத்துடன் வயிற்றில் அதிக உப்பிசமும் வலியும் இருந்தால் இதைக்கொடுக்கலாம்.

காஸ்டிகம் (200) :—அடிக்கடி மலம் கழிக்கப் பயனற்ற தூண்டுதல். உட்கார்ந்து கொண்டால் மலம் வெளியாகாது. நின்றுகொண்டால் சற்று சுலபமாக வெளியாகும். மலம் பல முடிச்சுகள் கொண்டதாகவும் எண்ணெய் தடவியதுபோல் பள பளப்பாயும் காணப்படும்.

கிராபைடிஸ் (200) :—மலம் பெரிய பெரிய பந்துகளாக இருப்பதுடன் ஒவ்வொரு பந்துக்கும் நடுவில் கயிறு போன்ற கோழையினால் ஒன்று சேர்க்கப்பட்

டிருப்பது போலவும் காணப்படும். மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்பட்டபோது அதைக் கவனியாமல் இருந்ததினால் ஏற்படும் மலச்சிக்கலுக்கு விசேஷமாய் உபயோகமாகு மென்று சொல்லப்படுகிறது.

தூஜா :—கறுப்பு உருண்டைகளாயுள்ள மலம், மலத்தின் ஒரு பகுதி வெளியே வந்தவுடன் ஆசனவாய் சுருங்கி விடுவதால் மறுபாதி வெளியாகாமல் உள்ளே சென்றுவிடும்.

நக்ஸ் வாமிகா (200) தற்கால நாகரீகத்துக்கு அடிமைப்பட்டு கண்ட வேளைகளில் சாப்பிடுவது, கண்ட கண்ட மருந்துகளைச் சாப்பிடுவது, அதிக நேரம் கண் விழித்தல் முதலிய காரணங்களால் ஏற்படும் மலச்சிக்கலுக்கு இது தேவைப்படும், பசிக்குறைவு, வாயில் கெட்ட ருசி, நாக்கு குழகுழப்பாய் இருத்தல், வயிற்றில் வேதனை, தலைவலி முதலிய பற்பல உபத்திரவங்களுடன் அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதலும் முயற்சித்தால் மலம் வெளியாகாமலும் இருக்கும்போது இது தேவைப் படும்.

நேட்ரம் மூர் (200) :—பிடிவாதமான மலச்சிக்கலில் மற்ற ஒளஷதங்களினால் போதிய குணம் காணாவிட்டால் இதை உபயோகிக்கவேண்டும். தீவிர மலம் ஆட்டுப் புழுக்கைகள் போல் சிறிது சிறிதாக சிரமத்துடன் வெளியேறுவதும் அபானத்தில் வெடிப்பும் வலியும் இருந்தாலும் தேவைப்படும்.

பிரயோனியா (30) :—உடம்பில் அதிக வறட்சி ஏற்படுவதால் தோன்றும் மலச்சிக்கலில் இது உபயோகமாகிறது. அதிக வறட்சியினால் அபரிமிதமான தாகமும் ஏராளமாய்த் தண்ணீர் உட்கொள்வதும் மலம்

காய்ந்து தேய்ந்து கெட்டியாக வெளியாவதும் காணப் படும்.

லைகபோடியம் (200) அடிக்கடி பயனில்லாத தூண் டுதல், மலம் கழிந்த பிறகும் சிறிதளவு மலம் உள்ளே தங்கி இருக்கும் உணர்ச்சி. கல்லீரல் கோளாறினுல் தோ ன்றும் மலச்சிக்கலில் அதிகம் பயன்படும்.

ஸைலீஷியா (30) குடல் தசைகளின் சக்திக் குறைவி னுல் மலம் வெளியே வருவதும் உள்ளே போவதுமாய் இருக்கும் மலச்சிக்கல்.

ஹைட்ராஸ்டிஸ் :— நீடித்த மலச்சிக்கலில் சிக்கலைத் தவிர மற்ற கோளாறுகள் ஏதுவும் இல்லாதபோது இது தேவை.

துணை சிகிச்சை

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தூண்டுதல் ஏற்படாவிட்டாலும் மலம் கழிக்க முயற்சி செய்து வரவேண்டும். இதனுல் பலன் ஏற்பட ஒன் றிரண்டு மாதங்கள்கூட பிடிக்கலாம். உணவில் மாமி சத்தின் அளவைக் குறைத்து காய்கறிகள், பழம் முத லியவைகளைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ள வேண் டும். போதிய உடல் வேலை இல்லாதவர்கள் தினமும் ஒன்றிரண்டு மைல்கள் வேகமாய் நடப்பது நலம்.

கடுமையான பேதி யுண்டாக்கும் ஒளஷதங்களை உட்கொள்வது கூடாது. இவைகளால் உடனே மலம் கழிந்தாலும் பிறகு முன்னைவிட மோசமாக மலச்சிக்கல் உண்டாகும், இதே போல் தான் எனிமா கொடுப்பதும் நாளடைவில் தீங்கையே விளைவிக்கும். மலச்சிக்கலினுல் அதிக வலி முதலிய உபத்திரவங்கள் காணப்படும்போது மட்டும் எனிமா உபயோகிக்கப் படலாம்.

———

[illegible]:-
"பால[illegible], [illegible] ரோட,
ராபர்ட்சன்பேட்டை, மதருஸ்-28

நமது டைரெக்டர்
டாக்டர் வி. எஸ். சுப்ரமண்யம் அவர்களால்
எழுதப்பட்டுள்ள புத்தகங்கள்.
(தமிழில்).

		விலை ரூ. அ. ப.
பன்னிரண்டு உயிர் உப்புக்கள் அல்லது பயோகெமிஸ்டிரி	...	6—8—0
தாய்த்திராவங்களின் மெட்டீரியா மெடிகா	...	1—8—0
இரத்தசோகை : வியாதி விவரமும் சிகிச்சையும்	...	0—4—0
மூலம் ,, ,,	...	0—4—0
நீரிழிவு, மதுமேகம் ,, ,,	...	0—4—0
வயிற்றுக்கடுப்பு or இரத்தபேதி ,, ,,	...	0—4—0
மேகவெட்டை ,, ,,	...	0—4—0
பெரியம்மை ,, ,,	...	0—4—0
காலரா ,, ,,	...	0—4—0
இருதய வியாதிகளைக் கண்டு பிடிக்கும் விதமும் சிகிச்சைக் குறிப்பும்	...	1—8—0

இவைகளுடன் எல்லா ஹோமியோபதி பயோகெமிஸ்டிரி ஔஷதங்களும், விசேஷ ஔஷதங்களும் இஞ்சக்ஷன் டியூபுகளும் எங்களிடம் கிடைக்கும். முழு விவரக் கேட்லாக் தேவையானோருக்கு அனுப்பப்படும்.

தி ஹோமியோபதி ஹௌஸ்,
மயிலாப்பூர் :: மதராஸ்-4.

Sri Rama & Co (Bharatamatha Press), 39, Anderson St., Madras-1